
# விளிம்பை மையமாக்கிய வித்தகர்!



இயற்கை, நிலம், பொழுது, உயிரினம், வாழ்க்கை, பண்பாடு அறிவியல், தொழில் நுட்பம் எனப் பிரபஞ்சத்தின் இயக்கப் பதிவு ஊடகம் மொழி ஆகும்.

அச்சம், பயம், அன்பு, வலி ஆகிய உணர்வுகளின் வெளிப்பாடாக மட்டும் உயிரினங்களுக்குப் பயன்பட்ட ஒலியை மொழியாக்கிக் கொண்டபோது பரிணாம வளர்ச்சியில் விலங்கு நிலையிலிருந்து மனித குலம் வேறுபடத் தொடங்கியிருக்கிறது. அந்தப் புள்ளியைத் தொடங்கிவைத்த பெருமை மொழிக்கு உரியது.

மனித குலத்திற்கு இயற்கை கற்றுத் தந்ததும் இயற்கையிடம் மனித குலம் கற்றுக்கொண்டதும் மொழி வழியேதான் தொடர்கின்றன.

எனவே நெருப்பைப் போலச் சக்கரத்தைப் போல மானுட வரலாற்றில் மொழிக்குரிய இடமும் முக்கியமானதாக இருக்கிறது.

பறவை, விலங்குகளின் அச்சத்திலிருந்து மனித குலத்தை விடுதலை செய்தது மொழி. பிற உயிரினங்களுக்கு மனித குலத்தைத் தலைமை தாங்கச் செய்திருப்பதும் மொழி.

ஆனால் அரசியல், சமய, சமுதாயப் பொருளாதாரக் காரணங்களால் உலகில் பல மொழிகள் உரிமை பறிக்கப்பட்டு மையத்திலிருந்து ஓரம் கட்டப்பட்டு விளிம்பில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவ்வாறு ஆலயங்களில், கல்விக் கூடங்களில், அரசியலில், அறிவியலில் , தொழில் நுட்பத்தில் ஆகியவற்றிலிருந்து ஒதுக்கி விளிம்பில் வைக்கப்பட்டிருந்த தமிழை மையத்திற்குக் கொண்டு வந்தவர்களில் குறிப்பிடத் தக்கவர் முத்தமிழ் அறிஞர் ஆவார்.

மனிதர்களைப் போலவே மொழிக்கும் உரிமை உண்டு; தன்மானம் உண்டு. ஆலயத்திற்குள் நுழையக் கூடாது; மேடைகளில் ஏறக் கூடாது; கல்வி நிறுவனங்களில்,அலுவலகங்களில் நீதிமன்றங்களில் மனிதர்களைப் போலவே மொழியிலும் தீண்டாமையைத் திணித்தார்கள். உரிமைகளைப் பறித்து, வரலாற்றில் தீண்டாமைக்கு ஆளாக்கப்பட்ட மொழியாகத் தமிழை வைத்திருந்தார்கள். தமிழின் தகுதிக்கு உரிய பெருமையையும் அதன் உரிமையையும் மீட்டெடுத்துத் தமிழ், சமநீதியும் சமூக நீதியும் பெற வாழ்நாள் முழுதும் போராடியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆவார்.

ஏனெனில் நீதி, நிதி, அரசியல், கல்வி, பண்பாடு, சடங்கு, சமூகத் தொடர்பு, சுதந்திரம், தன்மானம் என்று அங்கு இங்கு எனாதபடி மக்கள் வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும் மொழியின் ஆளுமைக்கும் செல்வாக்குக்கும் இடம் உண்டு. எனவே ஒரு மொழியின் உரிமை என்பதும் அதன் தன்மானம் என்பதும் அந்த மொழி பேசும் மக்களின் உரிமையாகவும் தன்மானமாகவும் இருக்கின்றன. எனவே அடிப்படையில் மனித உரிமை என்பது அவர் பேசும் மொழியின் உரிமையாகவே இருக்கிறது. எனவே உலகளாவிய மனித உரிமைகள் அறிவிக்கையில் 1948 இல் மொழி உரிமை சேர்க்கப்பட்டிருக்கிறது.

பன்மொழிச் சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட மொழியின் ஆதிக்கத்திலிருந்து மற்ற மொழிகள் விடுபடவும் தத்தம் உரிமைகளை நிலைநிறுத்தவும் அந்தந்த மொழிக்காரர்கள் தொடர்ந்து போராட வேண்டியிருக்கிறது. மனித உரிமைகளைப் போலவே, அடிப்படைத் தேவைகளுக்கும் கண்ணியமான வாழ்க்கை வாழ்வதற்கும் மொழிக்கும் உரிமைகள் தேவை.

மொழியின் அடையாளம் காக்கும் உரிமை, தாய்மொழியைப் பயன்படுத்தும் வாய்ப்புரிமை, ஆட்சி மொழிக்கான உரிமை, மொழிபெயர்ப்பு உரிமை, பண்பாட்டு உரிமை, பயன்பாட்டு உரிமை, கல்வி மொழி உரிமை, தனித்துவத்துடன் நிலைத்து வாழும் உரிமை, தேவைகளுக்கு ஏற்ப வளர்த்தெடுக்கும் உரிமை, தங்கள் மொழி பேசும் மக்களோடு தங்கள் மொழியைப் பயன்படுத்துவதற்கான உரிமை, உயர்வு தாழ்வு பாராட்டாத உரிமை போன்றவை மனித உரிமைகளின் உலகளாவிய அறிவிக்கையில் தனிப்பட்ட மொழியியல் உரிமைகளாக வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் தமிழுக்கு இந்த உரிமைகள் பிற்காலத்தில் மறுக்கப்பட்டிருந்தன. அவற்றைப் போராடி மீட்டுத் தந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆவார்.

### “தீட்டாயிடுத்து!”

திருவையாறு, தியாகராஜர் இசைவிழா. தியாகராஜர் திருவாரூர்க்காரர். வாழ்ந்து மறைந்த இடம் திருவையாறு. திருவாரூர் சிவபெருமான், தமிழ்ப் புலவர் சுந்தரருக்காக அவர் காதலி வீட்டுக்கு வீதியில் நடந்து தூது சென்றதாகக் கதை இருக்கிறது. ஆனால் திருவையாறு தியாகராஜர் இசைவிழாவில் தமிழுக்குத் தன்மான சோதனை நடந்திருக்கிறது. இது நடந்தது 1946 ஆம் ஆண்டு. கலைஞருக்கு அப்போது 24 வயது. பெரியாரின் குடி அரசு பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

செய்தி கேள்விப்பட்ட அவர் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதற்கு அவர் எழுத்தே சாட்சி.

**“தீட்டாயிடுத்து!**
**இந்த ஆண்டு திருவையாற்றில்**
**நடைபெற்ற தியாகராஜ அய்யர்**
**உற்சவத்தில், இசையரசு தண்ட**
**பாணி தேசிகர் ஆரம்பத்தில் ‘சித்தி**
**விநாயகனே என்ற பாட்டைப் பாடி**
**னாராம். அடுத்தபடி கச்சேரி**
**செய்யவந்த அரியக்குடி ராமானுஜ**
**ஐய்யங்கார் “தேசிகர் தமிழ் பாடி**
**சன்னிதானத்தைத் தீட்டுப்படுத்திவிட்டார்.**

**நான் இந்த மேடையில்**
**பாடமாட்டேன்” என்று**
**கூச்சலிட்டுத் தாம்தோம் எனத்**
**தாண்டிக் குதித்தாராம்.**

**இது இன்று நேற்றல்ல, மனுமந்**
**தாதா காலத்திலிருந்து “தமிழ்**
**பாஷை நீச்ச பாஷை”” என்றும்,**
**“பிராமணாள் ஸ்நானம் செய்து**
**விட்டு, சாப்பிடும்வரை தமிழ்**
**பேசக்கூடாது” என்றும், வீட்டில்**
**விசேஷ காலங்களில் தமிழ், வாயில்**
**நுழையக்கூடாதென்றும்**
**கூறி வந்ததோடு அனுஷ்டானத்திலும்**
**இருந்து வருகிறது. அகத்திலும்,**
**அக்கிரகாரத்திலும் இருந்துவந்த**
**இந்த அகம்பாவம் அய்யர்வாள்**
**உற்சவத்திலும் புகுந்துவிட்டது.**
**தமிழ் நாட்டிலே தமிழர்கள் உயி**
**ரோடு வாழும் நாட்டிலே தமிழர்**
**களுடைய மொழிக்குத் தடையுத்த**
**ரவு! ஆங்கில அரசாங்கமல்ல ஆரிய**
**அரசாங்கத்தின் ஆணை! “தமிழ்**
**மொழியில் பாடியதால் மேடை**
**தீட்டாகியிட்டது” என்ற ஆணவப்**
**பேச்சு கிளம்பியதற்குக் காரணம்**
**தமிழர்கள் அடிமைகளாக அனு**
**மார்களாக வாழ்வதுதான். தமிழர்இனம் சூத்திர**
**இனமாகவும்,**
**தமிழர் மொழி தீட்டுப்பட்ட மொழி**
**யாகவும் போய்விட்டது.” (குடி**
**அரசு, 9/2/1946 ,ப.7)**




**முனைவர் ம.இராசேந்திரன்,**
மேனாள் துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்.


### மீட்டெடுத்தல்

தமிழ், தகுதியும் பெருமையும் உடையதாக இருந்தும் தீட்டுப்பட்ட மொழியாக அதை ஒதுக்கி வைத்து விளிம்புக்குத் தள்ளியிருக்கிறார்கள். அதிலிருந்து தமிழை மீட்டெடுத்த முக்கிய நிகழ்வு 1970 மார்ச் மாதம் நடந்தது.

அப்போது முத்தமிழ் அறிஞர் முதலமைச்சர். கலைவாணர் அரங்கில் திரைப்படத் துறை அரசு விருதும் பரிசும் வழங்கும் விழா. கடவுள் வாழ்த்தோடு தொடங்கி இருக்கிறது. அதில் கலந்துகொண்ட முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,

“இனி தமிழக அரசு நிகழ்ச்சிகளில். தொடக்கத்தில் இறைவணக்கம் என்பது தமிழ்த்தாய் வாழ்த்தாக இருக்கும்; நீராரும் கடலுடுத்த எனும் மனோன்மணியம் சுந்தரனார் இயற்றிய பாடலே அந்த வாழ்த்தாக அமையும்.” (நெஞ்சுக்கு நீதி, பாகம் 2, ப. 233) என்று அறிவிக்கிறார்.

தமிழர் மொழி தீட்டுப்பட்டது என்று ஒதுக்கி வைத்தவர்களையும் எழுந்து நிற்கச் செய்ய, அரசு விழாக்களில் கடவுள் வாழ்த்துக்குப் பதிலாகத் தமிழ்த்தாய் வாழ்த்தைப் பாட வைத்தார். தமிழின் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து அவர்களையும் வாழ்த்த வைத்தார்.

*ஒருமுறை நாரதகான சபாவில் ஒரு நிகழ்ச்சி. முதல்வராகக் கலைஞர் கலந்து கொள்கிறார். அப்போது தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநராக இருந்த நான் பார்வையாளராகக் கூட்டத்தில் இருக்கிறேன்.

அங்கு பேசிய , செம்மங்குடி சீனிவாச ஐயர் முதல்வரிடம் ஒரு கோரிக்கை வைக்கிறார். மயிலாடுதுறை விசுவநாத சாஸ்திரி என்பவர் திருக்குறளைப் பாடுவதற்கு சுர, தாளக் குறிப்புகளை எழுதி முதல் தொகுதியை ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கும் முன் வெளியிட்டார். இரண்டாவது தொகுதியை அவர் தம்பி வெளியிட்டார். மற்றொரு தொகுதி வெளி வராமல் உள்ளது. அச்சான நூல்களும் இப்போது கிடைக்கவில்லை. கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள் என்பது கோரிக்கை.

விசுவநாத சாஸ்திரி, 1947 இல் சுதந்திர தினத்துக்காக தேசிய ஜெய கீதம் எழுதி வெளியிட்டவர். ‘ஜெயதி ஜயதி பாரத மாதா’ எனும் இவரது தேச பக்திப் பாடல் , ‘ Viictory victory to Thaai India’ என்று ஆங்கிலத்திலும் அப்போது மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. சமஸ்கிருதத்தில் ‘பாலர் பஞ்சரத்னம்’ எனும் தலைப்பில் குழந்தைகளுக்கான பாடல் தொகுப்பினை வெளியிட்டவர். இவரது ‘வள்ளி பரிணய மணிப்பிரவாள சதகம்’ எனும் நூலைக் கடலங்குடி நடேச சாஸ்திரி 1926 இல் வெளியிட்டுள்ளார்.

இந்தப் பின்னணியுடையவர் திருக்குறளைப் பாடவும் இசைக் கருவிகளில் இசைக்கவும் சுர தாளக் குறிப்புகளுடன் 1950 களில் வெளியிட்டிருக்கிறார்.

அரியக்குடி தீட்டாயிடுத்து என்று கூறிவந்த காலகட்டத்திலேயே விசுவநாத சாஸ்திரி திருக்குறளை மேடைகளில் பாட இசையமைத்துத் தந்திருக்கிறார் என்பது வியப்புக்கு உரிய செய்தி.

செம்மங்குடி பேசிக்கொண்டிருக்கும் போதே முதல்வர் பின்பக்கம் திரும்புகிறார். அவரது செயலாளர் எழுந்து குனிந்து காது கொடுக்கிறார்.

பார்வையாளராக இருந்த நான் மேடைக்குப் போகிறேன். முதல்வர் பின்பக்கம் இருந்த அவரின் செயலர் மறைந்த திரு சண்முகநாதன் என்னிடம் முதல்வர் சொன்ன செய்தியைச் சொல்கிறார்.

முத்தமிழ் அறிஞர், “தமிழ்வளர்ச்சித்துறை வழியாகத் தேடி எடுத்து ஒரு மாதத்திற்குள் திருக்குறள் மதுர கீர்த்தனை வெளியிடப்படும்” என்று செம்மங்குடிக்குச் சொல்கிறார்.

மற்றவர்களுக்கு அது அறிவிப்பு; தமிழ்வளர்ச்சித் துறைக்கு அது ஆணை. விசுவநாத சாஸ்திரி அவர்களின் மரபுரிமையர்களைக் கண்டுபிடித்து அவர்கள் வீட்டுப் பெட்டிகள் திறக்கப்பட்டு, திருக்குறள் மதுர கீர்த்தனை நூலைக் கண்டுபிடித்து, அச்சிட்டுஅறிவிப்புவந்த 28-வது நாள் முதல்வரிடம் காட்டினேன். புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தார். அங்கங்கே பார்வை நங்கூரம் இட்டது. பக்கம் முடிந்த போது அவர் தலை நிமிர்ந்து பார்த்த போது ஒரு புன்முறுவலில் வாழ்த்துப் பெற்றேன்.

“செம்மங்குடியைப் பார்த்து ஒரு படி கொடுத்து வா” என்றார்.

நான் செம்மங்குடியைத் தேடிப் போனேன். அவர் மருத்துவமனையில் இருப்பதாகச் சொன்னார்கள். அவர் சேர்க்கப்பட்டிருந்த தனியார் மருத்துவமனைக்குப் போனேன். படுக்கையில் இருந்தார். முதல்வர் கொடுத்து விட்டு வரச் சொன்னார் என்றதும் உட்கார முயன்றார் முடியவில்லை. புத்தகத்தைப் பார்த்தார். கண்களில் உற்சாகம் தெரிந்தது. பக்கத்தில் இருந்தவர்கள் உதவியில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்து புத்தகத்தில் சில பக்கங்களைப் புரட்டினார். புத்தகத்தை அப்படியே மார்பில் வைத்துக்கொண்டு எனது இரண்டு கைகளையும் பிடித்துக் கும்பிடும் வகையில் சொன்னார். “இது கலைஞருக்கான கும்பிடு. நல்ல காரியம் பண்ணியிருக்கிறார்” என்று மறுபடியும் உணர்ச்சி வசப்பட்டுக் கையைப் பிடித்துக் கும்பிட்டதை என்னால் மறக்க முடியாது.

திருவையாறில்1946 ஆம் ஆண்டு அரியக்குடி செய்ததற்கு மாற்றாகச் செம்மங்குடியின் பரிந்துரையில் விசுவநாத சாஸ்திரியின் திருக்குறள் மதுர கீர்த்தனை நூலை வெளியிடச் செய்திருக்கிறார் முத்தமிழ் அறிஞர் என்று இப்போது நினைத்துப் பார்க்கத் தோன்றுகிறது.

### செம்மொழி

தமிழை நீசமொழி என்று சொல்கிறார்களே என்று வருத்தப்பட்ட முத்தமிழ் அறிஞர், தமிழின் தகுதிக்கும் பெருமைக்கும் உரிய இடத்தைத் தமிழுக்குப் பெற்றுத்தர விரும்பினார். செம்மொழியாகத் தமிழை அறிவிக்க வேண்டும் என்ற ஒரு நூற்றாண்டுக் காலக் கோரிக்கையை முதல்வராக இல்லாத போதும் சாதித்துக் காட்டினார்.

உலக அளவில் ஒரு மொழி, செம்மொழி என்று அரசு நிலையில் அறிவிக்கப்பட்ட முதல் மொழி தமிழ் எனும் பெருமையைப் பெற்றுத் தந்தார். அதில் வியப்பு என்னவென்றால், தமிழைக் காட்டி சமஸ்கிருதம் பிறகு செம்மொழி ஆனது என்பதுதான்.

முதல்வராக அமர்ந்ததும் மைசூரில் ஒரு பிரிவாக இருந்த செம்மொழி அலுவலகத்தைத் தமிழகத்திற்குக் கொண்டுவந்து சென்னையில் செம்மொழி நிறுவனம் ஆக்கினார்.

அது ஒரு ஒன்றிய அரசு நிறுவனம். அதன் பெயர்ப் பலகையை எப்படி அமைப்பது என்ற சிக்கல் இருந்தது. செம்மொழித் தமிழ் நிறுவனத்தின் பெயர் இந்தியில் இருப்பது பொருத்தம் இல்லையே என்று நினைத்து, செம்மொழிக் காலத்துத் தமிழ் எழுத்தில் வைக்கலாம். ஏனெனில் அப்போது சில மொழிகளுக்கு எழுத்து இல்லை என்பதோடு பல மொழிகளே இல்லையே. அதனால் ‘தமிழி’ எழுத்தில் பெயர்ப் பலகை இருக்கலாம் என்று தெரிவித்ததோடு அது தவறுகள் இல்லாமல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருந்தார். தொல்லியல்துறை பேராசிரியர் இராசவேலுவிடம் எழுதி வாங்கி அதைக் கொண்டு போய் ஐராவதம் மகாதேவனிடம் காட்டினேன். அவர் சரியாக இருக்கிறது என்றார். அப்படியானால் உங்கள் கையெழுத்தை அந்தப் பக்கத்தில் போட்டுக் கொடுங்கள் என்று கேட்டு வாங்கிக் கொண்டுவந்து முத்தமிழ் அறிஞரிடம் தலைமைச் செயலகத்தில் காட்டினேன். அப்போதுதான் இசைவளித்தார். அந்தப் பெயர்ப் பலகைதான் பாலாறு கட்டிடத்தில் இருந்த செம்மொழி நிறுவனத்தில் இடம் பெற்றிருந்தது. அதன் பின்னர் உலகத் தமிழர்கள் பெருமிதம் அடையும் வகையில் கோவையில் செம்மொழி மாநாட்டை நடத்திக் காட்டினார்.

நான் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த போது, பல்கலைக்கழக நல்கைக் குழுவின் இரண்டு கோடி நிதியுதவியுடன், கலைஞர் உலகச் செம்மொழிகள் உயராய்வு மையம் ஒன்று தொடங்கப்பட்டது. முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள்தான் தொடங்கிவைத்தார்கள். அதனுடைய பெயர்ப்பலகையில் அந்தந்தச் செம்மொழியின் பெயர் அந்தந்த மொழியில் அமைக்கப்பட்டிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலே தமிழ் இருந்தது.

*செம்மொழித் தகுதிக்காக போராடியவர்களையும் குரல் தந்தவர்களையும் கொண்டாடும் வகையில் பரிதிமாற் கலைஞருக்கு அஞ்சல்தலை வெளியிடச் செய்தார். அவரது நூல்களை நாட்டுடைமை ஆக்கினார்.

மேலும் சிறப்புச் செய்ய எண்ணி, அவர் வாழ்ந்த இல்லத்தை நாட்டுடைமை ஆக்கி, நினைவு இல்லமாகவும் மாற்றிட ஆணையிட்டார்.

தமிழைக் கொண்டாடியவர்களைக் கொண்டாடி மகிழ்வதில் அவர் சாதி, மத வேறுபாடுகளைப் பார்த்ததில்லை. அதனால்தான் பரிதிமாற் கலைஞரை முதல் தமிழன் என்று பதிவு செய்திருக்கிறார்.

குரல் கொடுத்தவர் பரிதிமாற் கலைஞர்; சாதித்துக் காட்டியவர் முத்தமிழ்க் கலைஞர்.

நினைவில்லத் திறப்புவிழாவுக்கு 31.10.2007 அன்று மதுரைக்கு வந்திருந்தார். மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் அருகில் விளாச்சேரி கிராமத்தில்தான் பரிதிமாற் கலைஞர் இல்லம். நினைவில்லம் சீரமைக்கப்பட்டு மார்பளவு வெண்கலச் சிலையும் பரிதிமாற் கலைஞருக்கு அமைக்கப்பட்டிருந்தது. முதல்வர் வருவதற்கும் முன்பே நாங்கள் அங்கு சென்றிருந்தோம்.

முதல்வர் வந்து நினைவு இல்லத்தையும் சிலையையும் திறந்து வைத்துவிட்டு, அங்கிருந்த பார்வையாளர் புத்தகத்தைத் திறந்தார். பையிலிருந்து பேனாவை எடுத்துத் திறந்து,.

“தமிழுக்குச் செம்மொழித் தகுதிகோரிக் குரல் கொடுத்த முதல் தமிழன் பரிதிமாற் கலைஞர் வாழ்க” என்று எழுதிக் கையொப்பம் போட்டுவிட்டு மீண்டும் பரிதிமாற் கலைஞர் சிலையை அவர் பார்த்த பார்வையில் நன்றி கனிந்தது.

கூடவே, தமிழர்களுக்கு மட்டுமின்றித் தமிழுக்கும் சம நீதியும் சமுதாய நீதியும் சாதித்துக் கொடுத்து, விளிம்பு நிலைக்குத் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த தமிழ் மொழியை மையத்திற்குக் கொண்டு வந்திருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பெருமிதமும் வெளிப்பட்டது.



## உள்ளத்தால் ஒருவரே !

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் குறிப்பிட்டதைப் போல்,

**வெள்ளம் போல் தமிழர் கூட்டம்**
**வீரங்கொள் கூட்டம் அன்னார்**
**உள்ளத்தால் ஒருவரே மற்று**
**உடலினால் பலராய்க் காண்பார்.**

என்ற அந்த நிலையை எய்திட வேண்டும் என்பதுதான் நாம் காணுகின்ற கனவு.

**- கலைஞர்**

# கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க் கலைஞர் பிறந்த தமிழ்நாடு!

வரலாற்றாசிரியர்களாலும் பொருளாதார அறிஞர்களாலும் சமூகவியல் ஆய்வாளர்களாலும் "புதிய தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி" எனக் கலைஞர் போற்றப்படுவதைக் காண்கிறோம். போக்குவரத்து சிறந்தோங்க அவர் உருவமைத்து வழங்கிய சாலைகளும்,நீர்வளம் மேலோங்குதற்காக அவர் கட்டிக்கொடுத்த அணைக்கட்டுகளும்,வேலைச்சூழல் மேம்படும் வகையில் அவர் வடிவமைத்து வழங்கிய அரசு அலுவலகக் கட்டடங்களும்,தொழில்வளம் செழித்தோங்க அவரால் அமைந்த தொழிற் கூடங்களும் ஆலைகளும் குறித்துப் புள்ளிவிவரங்களுடன் பட்டியலிட்டால் நூற்றுக் கணக்கான பக்கங்கள் விரியும்.எண்ணிலடங்கா மருத்துவமனைகளும் மறுவாழ்வு இல்லங்களும் விடுபட்டனவே என நீங்கள் குறைப்படுவது கேட்கிறது.

இவையனைத்துக்கும் மேலாக கலைஞர் கட்டிய தொடக்கநிலைப் பள்ளிக்கூடங்கள்,நடுநிலை, உயர்நிலை, மேனிலைப் பள்ளிகள், தொழிற்பயிற்சி மையங்கள்,பாலிடெக்னிக்குகள், பொறியியல் கல்லூரிகள்,கலைஅறிவியல் கல்லூரிகள்,மருத்துவக்கல்லூரிகள் ஆகியவற்றைப் பட்டியலிட மேலும் பன்னூறு பக்கங்கள் தேவைப்படும்.

பள்ளிக்கல்வி மேம்படவும் பெண்கள் கல்வி கற்கும் எண்ணிக்கை பல்கிப்பெருகவும்,கல்லூரிக் கல்வி அனைவர்க்கும் கிட்டவும் கலைஞர் வகுத்த திட்டங்களும் அள்ளி வழங்கிய உதவிநிதிச் சலுகைகளும் எழுத எழுத விரிந்து செல்லும்.

இதன் உண்மையை உறுதி செய்ய ஓர் உபாயம் கூறுகிறேன்.

"கலைஞர் ஆட்சியில் கல்வி வளர்ச்சி" என்னும் தலைப்பைக் கூகுள் தேடுபொறியில் இட்டுப் பாருங்கள். "About 73,800 results (0.42 seconds)" என்று ஆங்கிலத்தில் குறிப்புடன் நூற்றுக்கணக்கான தரவுகள் கணினித்திரையில் பளிச்சிட்டுப் பாய்ந்துவருவதைக் காணலாம்.இவையனைத்தும் கலைஞர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட கலைக்கல்லூரிகள், தொழிற்கல்லூரிகள், மருத்துவக்கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் விவரங்களை வழங்கும் ஆவணங்கள் என்பதால் கூறியது கூறலாக இவற்றை இங்கே மறுபதிப்புச் செய்ய நான் விரும்பவில்லை.ஒரு பேராசிரியன் என்னும் முறையில் நான் கண்ட கலைஞரின் கல்விப்புரட்சியை விவரிக்கும் அனுபவ உரையாக பட்டறிவுப் பதிவாகச் சில கருத்துகளைத் தொகுத்துரைக்க விழைகிறேன்.

இந்து தமிழ் திசை நாளிதழின் 14.8.2018ஆம் நாளிட்ட பதிப்பில் நாடறிந்த கல்வியாளர் பிரின்சு கஜேந்திரபாபு அவர்கள் கூறிய கருத்தை என் கட்டுரைக்கு முன்னுரையாக அமைத்துக்கொள்வது பொருத்தமாக இருக்கும்.

"கலைஞர் கருணாநிதி கல்வித் தளத்தில் சமூக நீதி காக்கத் தன் இறுதி நாள்வரை பாடுபட்டார். பெண்களுக்குக் கல்வி வழங்குவது 20ஆம் நூற்றாண்டிலும் ஒரு சவாலாகவே இருந்தது. அதிலும் தொடக்கப் பள்ளியைத் தாண்டி பெண்களுக்குப் படிப்பு என்பது கனவாகவே இருந்தது.

இதை உணர்ந்து 8ஆம் வகுப்பு வரையாவது பெண் குழந்தைகளைப் படிக்கவைக்க மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் பெயரில் எட்டாம் வகுப்பு அல்லது அதற்கு மேல் படித்த பெண்கள் திருமண வயதுக்கு வந்த பிறகு திருமணத்துக்கான உதவித் தொகையாக ரூ.5,000 வழங்கும் திட்டத்தை 1989 ஜூன் 3 அன்று தொடங்கி வைத்தவர் கருணாநிதி. இத்திட்டம் அறிவிக்கப்பட்டவுடன் நடுநிலைப் பள்ளிகளில் குறிப்பாகக் கிராமப்புறப் பள்ளிகளில் பெண்கள் சேர்க்கை விகிதம் அதிகரித்தது.

**செயல்வழிக் கல்வி**

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கவனத்தில் கொண்டு மேல்நிலைப் பள்ளி பாடப் பிரிவில் கணினிப் பாடத்தை 1999-2000 ஆண்டு தொடங்கினார் கருணாநிதி. ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களின் குழந்தைகளும் இத்துறையில் தடம் பதிக்க வேண்டும் என்ற சிந்தனையில் 2007-2008 கல்வியாண்டில் 1,880 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கூடங்கள் அமைத்துத் தந்தார்.

மனப்பாட முறையை ஒழித்து, மகிழ்ச்சியுடன் விளையாடி குழந்தைகள் பயில அனைத்து மாநிலத் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளிலும் ஒன்றாம் வகுப்பு முதல் நான்காம் வகுப்புவரை செயல்வழிக் கற்றல் முறையை 2007-2008 கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தினார். பின்னர் அது எட்டாம் வகுப்புவரை நீட்டிக்கப்பட்டது. இதே காலகட்டத்தில் அரசுப் பள்ளி மாணவர்கள் ஆங்கிலம் சரளமாகப் பேச, படிக்க, எழுத ஆங்கில மொழிக் கூடங்கள் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் தொடங்கப்பட்டன.

**தமிழுக்கு முதல் இடம்**

சந்தைச் சூழலைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, தமிழ் வழிக் கல்வியை ஊக்கப்படுத்த 2007-2008 கல்வியாண்டு முதல் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்குப் பத்தாம், பன்னிரண்டாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுக்கான கட்டணத்திலிருந்து விலக்களித்தார்.

தமிழை ஒரு பாடமாகப் படிக்காமலேயே தமிழ்நாட்டில் ஒருவர் பள்ளிப் படிப்பை முடிக்கலாம் என்று இருந்த நிலையை மாற்ற, ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை அனைத்து மாணவர்களும் தமிழை முதல் மொழியாக, கட்டாய மொழிப் பாடமாகப் பயில வேண்டும் என்ற சட்டத்தை இயற்றி நடைமுறைக்குக் கொண்டுவந்தார்.

**ஏட்டிலும் சாப்பாட்டிலும்**

21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளக் கல்வியில் மட்டுமல்ல; அனைத்து நிலையிலும் மாணவர்கள் தயாராக இருக்க வேண்டும். அதற்கு ஆரோக்கியமான உடல்வளர்ச்சி தேவை. இத்தகைய உயரிய சிந்தனையின் வெளிப்பாடாக 2007-2008 முதல் சத்துணவுத் திட்டத்தில் வாரத்துக்கு மூன்று முட்டைகள் வழங்கச் செய்தார்.

பள்ளிக் கல்வியின் வளர்ச்சியைக் கருத்தில் எடுத்துப் பள்ளிக் கல்விக்கெனத் தனித் துறை உருவாக்கி, பள்ளிக் கல்விக்கெனத் தனி அமைச்சரை நியமித்தது கல்வி வளர்ச்சியில் அவர் கொண்ட ஆர்வத்தின் வெளிப்பாடே.

1969 ல் புகுமுக (PUC) வகுப்பு வரை கட்டணமில்லாக் கல்வி என அறிவித்தார். பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் ஒன்றாக இருந்தபோதிலும் வெவ்வேறு பெயருடனும் வெவ்வேறு தேர்வுகளாகவும் இருந்த காரணத்தால், குறிப்பிட்ட பாடத்திட்ட மாணவர் மனத்தில் உயர்வு மனப்பான்மையும் மற்ற மாணவர் மனத்தில் தாழ்வு மனப்பான்மையும் உருவாவது தவறு. குழந்தைப் பருவத்தில் இவ்வாறான மனப்பான்மை வேரூன்றுவது எதிர்காலச் சமூகத்துக்கு நல்லதல்ல என்பதை உணர்ந்து, தமிழ்நாடு அரசின் அங்கீகாரத்தின் கீழ் செயல்படும் அனைத்துப் பள்ளி மாணவருக்கும் பொதுவான ஒரு பாடத்திட்டம், பத்தாம் வகுப்பு இறுதியில் ஒரே தேர்வு என்ற 'சமச்சீர் கல்வி'யை நடைமுறைக்குக் கொண்டுவந்தார். தமிழகக் கல்வி வரலாற்றில் அது ஒரு மைல் கல்.

**[நன்றி: "சமச்சீரான கல்வி தந்தவர்" கட்டுரையாளர்: பு.பா.பிரின்ஸ் கஜேந்திர பாபு, கல்வி செயற்பாட்டாளர், இந்து தமிழ் திசை நாளிதழ் 14/8/2018ஆம் நாளிட்ட மின்பதிப்பு]**

இன்னும் சிறப்பாக முரசொலி இணையதளத்திலேயே



கலைஞருக்குப் புகழ்வணக்கம் செலுத்திய பல கல்வி மேதைகளின் கட்டுரைகளைக் காணலாம். அவையனைத்தும் கலைஞர் 'தமிழ்நாட்டின் கல்விப்புரட்சியாளர்' எனவும் 'உயர்கல்வித் தந்தை' எனவும் 'பெண்கல்வியின் விடிவெள்ளி' எனவும் அறுதியிட்டுரைக்கும் ஆவணங்களாக விளங்குகின்றன.

1987ஆம் ஆண்டில் நான் முதன்முதலாக அமெரிக்காவுக்குச் சென்று ஊட்டா மாநிலத்தில் அமைந்த 'பிரிகாம் யுங் பல்கலைக்கழகத்தில்' நடைபெற்ற ஒரு மொழியியற்கருத்தரங்கில் கலந்துகொண்டேன்.நான் வழங்கிய ஆய்வுரையின் தலைப்பு"ஆட்சித்துறைச் சொல்லாக்கத்தின் வடிவமைப்பு" என்பதாகும்.முன்னொட்டுகள் பின்னொட்டுகள், தொகைச்சொல்லாக்கம் ஆகிய உத்திகளைக் கொண்டு புத்தம்புதிய ஆட்சித்துறைச் சொற்கள் உருவாகி வளர்ந்த விதத்தை என் கட்டுரையில் தொகுத்துரைத்திருந்தேன். அதற்கு முன்னதாக பெர்சோ-அராபியச் சொற்களும் சமச்கிருதச் சொற்களும் நிறைந்திருந்த ஆட்சித்துறைச் சொற்கோவை எவ்வாறு 1967இல் தி.மு.க.ஆட்சி அமைந்த பின்னர் செழுந்தமிழ்ச் சொல்லாட்சி பெற்றமைந்தது என்பதையும் சொல்லாக்க வரலாற்றுக் கண்ணோட்டத்தில் விவரித்திருந்தேன்.ஆண்டு 1987-அப்போது தமிழ்நாட்டில் தி.மு.க.ஆட்சியில் இல்லை.ஆயினும் இத்தகைய தனித் தமிழ்ச்சொல்லாட்சி தி.மு.க.வழங்கிய கொடையே என்னும் வரலாற்றுண்மையை மாநாட்டுப் பேராளர்கள் மனமார வரவேற்றதுடன் கலைஞரின் இலக்கியப் படைப்பாற்றல் சொல்லாக்கவளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தது என்பதையும் வழிமொழிந்தனர்.

கலைஞர் நிறையச் சொற்களை உருவாக்கி வழங்கியுள்ளார்.அவர் உருவாக்கிய சொற்களில் என்னையும் தமிழறிந்த அனைவரையுமே மிகவும் ஈர்த்த சொல் எது தெரியுமா?

"மாற்றுத் திறனாளி" என்னும் சொல்.

அதுவரை "ஊனமுற்றோர்" என்னும் சொல்லைப் பயன்படுத்தி சமுதாயத்தின் ஒரு பிரிவினரை முடக்கி வைத்திருந்த நிலையில் கலைஞருடைய சொல்லாக்கத்திறனால் "மாற்றுத் திறனாளி" என அச் சொல் மாற்றம் பெற்றுப் புதிய எழுச்சியையும் ஊக்கத்தையும் ஆளுமை வளர்ச்சியையும் ஏற்படுத்தியது என்பதே உண்மை.



முனைவர் மறைமலை இலக்குவனார்
இயக்குநர்,உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம்,சென்னை

"மாற்றுத் திறனாளிகளுக்குள்ள தனிப்பட்ட திறமைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களை உடல் ஊனமுற்றோர், குருடர், செவிடர் என்று அழைப்பதைத் தவிர்த்து அவர்கள் மீது சமுதாயம் கொண்டுள்ள கண்ணோட்டத்தை மாற்றுவதற்கென இனி அவர்களை மாற்றுத் திறனாளிகள் என அழைக்க வேண்டும் என அரசு அறிவித்துள்ளது. தமிழ்நாடு அரசால் மாற்றுத் திறனாளிகள் நலனு க்கென சமீபத்தில் தலைமைச் செயலகத்தில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை என தனியாக ஒரு நிர்வாகத் துறை துவக்கப்பட்டது." என்னும் முதலமைச்சர் தளபதியாரின் அறிவிப்பை இங்குச் சுட்டிக்காட்டுதல் பொருந்தும்.

மாற்றுத் திறனாளிகள் முன்னேற்றத்துக்காக அரசு அளித்துவரும் உதவிகளும் அறிவித்துள்ள திட்டங்களும் செய்த நன்மைகளுக்குச் சமமாக "மாற்றுத் திறனாளி" என்னும் சொல் ஏற்படுத்திய ஆளுமை எழுச்சியைக் கூறலாமல்லவா?

1997இல் அமெரிக்காவின் கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பெற்ற தமிழியல் புலத்தின் முதல் சிறப்பு வருகைப் பேராசிரியராகப் பணியேற்றுச் சென்றேன்.அப்போதுதான் கணினிவேலைவாய்ப்பின் பொற்காலம் தொடங்கியது எனலாம்.வாரநாட்களில் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுவதுடன் வார விடுமுறை நாள்களாகிய சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களுக்கும் சென்று அங்கே இயங்கி வரும் தமிழ்ச்சங்கப் பொறுப்பாளர்களைக் கண்டு உரையாடுவதுடன் அவர்கள் வார விடுமுறை நாள்களில் புலம்பெயர் தமிழர்களின் குழந்தைகளுக்காக நடத்தும் தமிழ் வகுப்புகளையும் பார்வையிட்டு ஊக்கவுரை வழங்கி வரவேண்டுமெனவும் பல்கலைக்கழகம் சிறப்பு வேண்டுகோள் விடுத்திருந்தது.அங்கே தமிழியல் புலம் அமையப் பல்வேறு மாநிலங்களின் தமிழ்ச்சங்கங்களும் நிதி திரட்டிக் கொடுத்திருந்தமையால் பல்கலைக்கழகத்தின் சார்பில் நன்றி கூறும் வகையில் பல்கலைக்கழகமே விமானப் பயணத்திற்கும் ஏற்பாடு செய்தது.அங்கே பணியாற்றும் பொறியாளர்கள் தன்னார்வப் பணியாகக் குழந்தைகளுக்குத் தமிழ் வகுப்புகளை நடத்திவருவதால் சிறப்பு வருகைப் பேராசிரியர் அவற்றைப் பார்வையிட்டு ஊக்கம் வழங்கவேண்டுமெனவும் பல்கலைக்கழக நிருவாகம் கருதியது.இது ஓர் அரிய நிகழ்ச்சி;எனக்குக் கிட்டிய அரிய வாய்ப்பு.

வெளிநாடுகளிலிருந்து நாள்தோறும் வந்து குவிந்த பன்னூற்றுக் கணக்கான பொறியாளர்களுள் இந்தியர்களும் சீனர்களுமே பெரும்பகுதியினர்.இந்தியர்களுள் ஆந்திராவிலிருந்தும் தமிழ்நாட்டிலிருந்தும் வருகைபுரிவோரே பெரும்பான்மையினர்.பொறியியல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்காக 'ஒற்றைச் சாளரமுறை'யைக் கொணர்ந்து தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதியினரும் பொறியியல் கற்கச் செய்த கலைஞரின் ஆட்சியே இதற்குக் காரணம்.முதல் தலைமுறையில் கல்வி பெறுவோர்க்குச் சிறப்பிடமும் சிற்றூரிலிருந்து கல்விகற்போர்க்குச் சிறப்பு உதவித்தொகையும் வழங்கிக் கல்வி மணம் பரவச் செய்த கலைஞரின் ஆட்சித்திறன் கலிபோர்னியா வரை தமிழ் இளைஞர்கள் வேலைக்குச் செல்லும் வாய்ப்பை வாரி வழங்கியது என்பதே வரலாற்றுண்மை.

இந்த வாய்ப்பு மேலும் தொடர்ந்திட தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கவனத்தில் கொண்டு மேல்நிலைப் பள்ளி பாடப் பிரிவில் கணினிப் பாடத்தை 1999-2000ஆம் ஆண்டு தொடங்கினார் கலைஞர். இந்தியாவிலேயே முதலாவதாக 30 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் 666 அரசு மேல்நிலைப்பள்ளிகளில் கணிப்பொறிக் கல்வி வழங்கியதுடன் நில்லாமல் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களின் குழந்தைகளும் இத்துறையில் தடம் பதிக்க வேண்டும் என்ற சிந்தனையில் 2007-2008 கல்வியாண்டில் 1,880 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கூடங்கள் அமைத்துத் தந்தார்.

சன் நிறுவனம்,மைக்ரோசாப்டு நிறுவனம் போன்ற மிகப் பெரும் கணினிநிறுவனங்களில் தமிழ் இளஞர்கள் நிறைந்திருப்பதன் காரணம் புரிகிறதா? 2000ஆவது ஆண்டிலும் 2010ஆவது ஆண்டிலும் உலகத் தமிழ் இணைய மாநாட்டைத் தமிழ்நாட்டரசு தன் பொறுப்பில் நடத்தக் கலைஞர் ஆவன செய்தார்.கணினித்தமிழ் வளரவும்,புத்தம்புது மென்பொருள்கள் தமிழில் தோன்றவும் இம் மாநாடுகள் வழிவகுத்ததைச் சொல்லித் தெரிய வேண்டுவதில்லை. தகவல் தொழில்நுட்பப் பயன்கள், உலகம் முழுவதுமுள்ள தமிழ் மக்கள் அனைவரையும் சென்றடைய கலைஞர் உருவாக்கிய "தமிழ் இணையப் பல்கலைக்,கழகம்" உறுதுணை புரிந்தது.

கலைஞர் தோற்றுவித்த "டைடல் பூங்கா" கணினிநுட்பங்கள் வளர வழிவகுத்துப் புதிய வரலாறு படைத்தது.

கலைஞரின் ஆசான் பேராசிரியர் சி.இலக்குவனார் "தொல்காப்பியமும் திருக்குறளும் தமிழரின் இரு கண்கள்" எனக் குறிப்பிட்டார்.கலைஞர் தாம் இயற்றிய " தொல்காப்பியப் பூங்கா" என்னும் நூலில் எளிய தமிழில் மிகச் சுவையாகத் தொல்காப்பியத்தை அறிமுகப்படுத்தினார்.பள்ளிப் படிப்பு மட்டுமே படித்தவர்கள் கூடத் தொல்காப்பியத்தை முறையாக அறிந்துகொள்ள இந் நூல் ஒரு வழிகாட்டியாக விளங்கியது.

தி.மு.க.ஆட்சிக்கு வந்தபோது போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த கலைஞர், பேருந்து வண்டிகளிலெல்லாம் திருவள்ளுவர் படமும் திருக்குறள் ஒன்றும் இடம்பெறச் செய்தார்.முதலமைச்சரான பின்னர் உலகம் போற்றும் வண்ணம் வள்ளுவர் கோட்டம் அமைத்தார்.

திருவள்ளுவர் திருநாளைத் தை இரண்டாம் நாள் மிகச் சிறப்பாக நடத்த ஆவன செய்தார்.இதன் விளைவாக உலகெங்கும் தை இரண்டாம் நாள் திருவள்ளுவர் திருநாள் மிகச் சிறப்பாகப் புலம்பெயர் தமிழர்களால் கொண்டாடப் பெற இது வழிவகுத்தது.

2014ஆம் ஆண்டில் அமெரிக்காவில் வடக்கு கரோலினா மாநிலத்தில் சார்ல்டன் நகரில் அமைந்த புகழ்பெற்ற மருத்துவப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவிலும் மொரீசியசு நாட்டில் 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவிலும் மலேசியாவில் கிள்ளாங் நகரில் அமைந்த திருவள்ளுவர் திருமண்டப விழாவிலும்கலந்துகொண்டு கலைஞர் விதைத்த வள்ளுவப்பயிர் வையகமெங்கும் செழித்து வளர்வதைக் கண்டு மகிழ்ந்துள்ளேன்.

மருத்துவக் கல்வியில் சேர்வதற்கு மதிப்பெண் கணக்கிடும்போது மாணவர்கள் தமிழில் பெறும் மதிப்பெண்களும் சேர்த்துக் கணக்கிடும் முறை கலைஞர் ஆட்சியின் தொடக்கக் காலத்தில் 1969 முதல் 1975 வரை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இதன்விளைவாகப்புகுமுக வகுப்பில் (பி.யு.சி.) அறிவியல் (விலங்கியல், வேதியியல், இயற்பியல்) பாடங்களில் சற்றுக் குறைவாக மதிப்பெண் பெற்றிருந்தாலும் தமிழில் மிகுந்த மதிப்பெண் பெற்றவர்கள் மொத்தக் கூட்டு மதிப்பெண்ணில் பின்னடைவு பெறாமல் மருத்துவக்கல்வியில் நுழைவுபெற முடிந்தது. தேர்வுத்தாளை அப்போதெல்லாம் நாங்கள் வீட்டிலேயே திருத்தும் முறை இருந்ததால் நிறையப் பெற்றோர் பரிந்துரைகளுடன் வந்து முற்றுகையிடுவர். அதன்பின்னர் புகுமுக வகுப்பு ஒழிந்தது. மேல்நிலைக்கல்வி +2 வகுப்பு வந்தது. தமிழ் தன் மதிப்பையும்இழந்தது.

இன்று நார்வே நாட்டில் அன்றைய கலைஞரின் ஆட்சியைப் போல் மருத்துவக்கல்விக்குத் தமிழ் மதிப்பெண் கணக்கில்எடுத்துக்கொள்ளப்படுவதைஅறிந்துமகிழ்ந்தேன்.

தமிழ்ச்செல்வன் "உலகத்தாய்மொழிக்கல்வி" என்னும் கட்டுரையில் கூறுவதைப்பாருங்கள்.

நார்வே நாட்டின் பள்ளிக்கூட மேல்நிலை வகுப்பில், இயற்பியல், வேதியியல், உயிரியியல், கணிதம் உள்ளிட்ட பாடப்பிரிவுகளோடு, சர்வதேசமொழிகள் (ஜெர்மன், ஃபிரெஞ்சு, ஸ்பானியம், தமிழ், பெர்சியம், அரேபியம் உள்ளிட்ட மொழிகளில்) ஒன்றை மாணவ, மாணவியர்கள் தேர்ந்தெடுத்து தேர்வெழுதவேண்டும். மேல்நிலை வகுப்பு மூன்று ஆண்டுகளிலும் இந்தமொழிப்பாடங்களில் ஒன்றில்தேர்வெழுதினால், இயற்பியல், வேதியியல், கணிதம், உயிரியியல் பாடங்களில் மதிப்பெண் குறைந்திருந்து, இம் மொழிப் பாடதேர்வில் மதிப்பெண் அதிகமாக வாங்கியிருந்தால், மருத்துவம் / பொறியியல் சேர்க்கைக்கான கூட்டு மதிப்பெண்ணில், குறைந்த மதிப்பெண் வாங்கிய பாடத்தை நீக்கிவிட்டு மொழிப்பாட மதிப்பெண்ணைச் சேர்த்துக்கொள்ளலாம்.

அதாவது, நார்வே நாட்டினில் தமிழ்மொழிபாடத்தில் பெறும் மதிப்பெண், நார்வே நாட்டின் மருத்துவக்கல்வி நுழைவிற்குஉதவுகிறது.

ஆஸ்திரேலியாவிலும் மருத்துவக்கல்விக்குத் தமிழ் மதிப்பெண்களைச் சேர்த்துக்கொள்ளும் முறை இருப்பதாகச் சிட்னியிலிருந்து எழுத்தாளர் மாத்தளைசோமு தெரிவித்துள்ளார்.

கலைஞர் தமிழ்நாட்டில் விதைத்த விதை வையகமெங்கும் பரவித் தமிழுக்குச் சிறப்புச் சேர்ப்பதை எத்தனைத் தமிழர்கள் அறிவார்கள்?

யாரும் தம்மைப் பாராட்டுவதற்காகக் கலைஞர் எஞ்ஞான்றும் செயல்புரிந்ததில்லை.தமிழ்ச் சமுதாயம். நன்மை பெற்றுச் சிறந்தோங்கவே அவர் செயல்பட்டார். நன்றியுள்ள தமிழர்கள் புரிந்துகொள்வார்களா?



## மனிதத் தமிழ்!

**கொ**த்தாக இன்பம், குழையக் குழையச் சுவை மொழிகள், சத்தாக அனைவருக்கும் எப்பொழுதும் இருக்கும்வரை என்றும் இருக்கத் தரலாம் என்றாலும், என் நடை தள்ளாடலாம், தடை படலாம், முடிவுற்றுப் போய்விடலாம்; ஆனால் நான் பெற்றுள்ள அந்த உணர்வுகளுக்கு என் அன்னை மடிசுகம் தந்த என் சொந்தத் தமிழுக்கு என்றும் தள்ளாட்டமில்லை, தடையில்லை, முடிவே இல்லை, இல்லவே இல்லை - ஏன்? அது மனிதத் தமிழ்!

**- கலைஞர்**